**செய்தி வெளியீடு எண்: 746** **நாள்: 02.11.2019**

**செய்தி வெளியீடு**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் **1.11.2019** அன்று தலைமைச் செயலகத்தில், சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் வட்டம், வைகை ஆற்றின் தென்கரையில் உள்ள கீழடி கிராமத்தில், தமிழ்நாடு அரசின் தொல்லியல் துறையால் அகழாய்வு செய்து கண்டெடுக்கப்பட்ட **6720** தொல்பொருட்களை பொதுமக்கள் பார்வையிட்டுப் பயனடையும் வகையில் மதுரை, உலகத் தமிழ்ச் சங்க வளாகத்தில் கீழடி அகழாய்வு தொல்பொருட்கள் கண்காட்சியை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாக துவக்கி வைத்தார்கள்.

பழந்தமிழரின் பெருமையை உலக அரங்கில் நிலைநிறுத்தும் பணியை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு தொடர்ந்து தனிக்கவனம் செலுத்தி செயல்படுத்தி வருகிறது. அவ்வகையில், சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் வட்டம், கீழடி கிராமத்தில் அமைந்துள்ள பள்ளிச்சந்தை திடலில் **110** ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள தொல்லியல் மேட்டில் இந்திய தொல்லியல் துறை **2014–2015, 2015–2016, 2016–2017** ஆகிய மூன்று ஆண்டுகள் அகழாய்வு மேற்கொண்டுள்ளது. இந்த அகழாய்வுகளில், **7,818** தொல்பொருட்கள் அகழ்ந்தெடுக்கப்பட்டு கீழடியில் சங்ககால (வரலாற்றுத் தொடக்க காலம்) மக்கள் வாழ்ந்ததற்கானச் சான்றுகள் வெளிப்படுத்தப்பட்டன.

இச்சான்றுகளின் அடிப்படையில், தமிழ்நாடு அரசின் தொல்லியல் துறை கீழடியில் அகழாய்வினை மேற்கொள்ள மத்திய தொல்லியல் ஆலோசனைக் குழுவின் அனுமதியினைப் பெற்றது. இந்த நான்காம் கட்ட அகழாய்விற்கு தமிழ்நாடு அரசு **55** லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்தது. அகழாய்வு நெறிமுறைகளின்படி, **2018–2019**–ஆம் ஆண்டில் நான்காம் கட்ட தொல்லியல் அகழாய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த அகழாய்வில் **34** குழிகள் அமைக்கப்பட்டு **5,820** தொல்பொருட்களும் பழந்தமிழரின் கட்டுமானப் பகுதியும் வெளிப்படுத்தப்பட்டன. இவற்றில் தங்கத்திலான அணிகலன்களின் உடைந்த பாகங்கள், செம்பிலான பொருட்கள், பல்வேறு வகையான மணிகள், சுடுமண்ணாலான உருவங்கள், தந்தத்திலான பொருட்கள், ஆட்டக்காய்கள், தக்ளிகள் போன்றவை குறிப்பிடத்தக்கவையாகும். மேலும், தமிழி எழுத்துப்பொறிப்பு கொண்ட **56** பானை

ஓடுகளும், 1001 குறியீடுகள் பொறிக்கப்பட்ட பானை ஓடுகளும் கண்டெடுக்கப்பட்டன. இரண்டு உறை கிணறுகளும் வெளிப்படுத்தப்பட்டன.

நான்காம் கட்ட அகழாய்வினை அடுத்து 2018–2019 –ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசு கீழடியில் ஐந்தாம் கட்ட அகழாய்வினை விரிவாகவும் சீரிய முறையிலும் செய்வதற்கு 47 லட்சம் ரூபாய் நிதியினை ஒதுக்கீடு செய்தது.

தமிழ்நாடு அரசின் தொல்லியல் துறை ஐந்தாம் கட்டத்தில் அகழாய்வு செய்வதற்குரிய இடத்தினை தேர்வு செய்வதற்கு பல்வேறு அறிவியல் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி களஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, அதன் அடிப்படையில் இடங்கள் தேர்வு செய்யப்பட்டு, அகழாய்வு நெறிமுறைகளின்படி அகழாய்வு செய்யப்பட்டன. இந்த ஐந்தாம் கட்ட அகழாய்வில் பல்வேறு வடிவிலான செங்கல் கட்டுமானங்கள் வெளிக்கொணரப்பட்டுள்ளன. இக்கட்டுமானங்கள் செங்கல்லிலான திறந்த நிலையிலான வாய்க்கால், மூடிய நிலையிலுள்ள வடிகால், சுருள் வடிவிலான சுடுமண் குழாய் போன்ற வடிகால் அமைப்புகள் கண்டறியப்பட்டன. இவை அன்றைய நீர்மேலாண்மையை எடுத்துக்காட்டுகிறது. மேலும், 16 மீட்டர் நீளத்தில் ஒற்றை அடுக்குடன் கூடிய சுவர், இரண்டு உறைகிணறுகள், செங்கல் கொண்டு கட்டப்பட்ட தொட்டி போன்றவை வெளிப்படுத்தப்பட்டுள்ளன. மேலும், சுடுமண் உருவங்கள், மணிகள், செப்புக்காசுகள், இரும்புப் பொருட்கள், வட்டச்சில்லுகள், ஆட்டக்காய்கள், எலும்பு முனைகள், சுடுமண் காதணிகள், சங்கு வளையல்கள், தந்தத்திலான பொருட்கள் போன்ற ஏறத்தாழ 900 தொல்பொருட்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

தொல்லியல் ஆய்வில் அகழாய்வு ஒரு முக்கியப்பணி என்றால், அகழாய்வில் வெளிக்கொணரப்பட்ட பொருள்களை காலக் கணிப்புக்கு உட்படுத்துவது மற்றொரு முக்கியப் பணியாகும். உலகத்தரம் வாய்ந்த ஆய்வகங்களில் இவை ஆய்வு செய்யப்படுகின்றன. கீழடியில் கீழ்மட்ட அடுக்கில் எடுக்கப்பட்ட கரிப்பொருள் ஒன்று அமெரிக்க ஐக்கிய நாட்டின், புளோரிடா மாநிலத்தில் மியாமி என்ற நகரிலுள்ள பீட்டா பகுப்பாய்வு ஆய்வகத்துக்கு அனுப்பப்பட்டது. இக்கரிமத்தின் காலம் கி.மு.580 என்பது ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, கீழடியில் 2600 ஆண்டுகள் பழமையான நாகரிகம் நிலவியது என்று உரைக்கலாம்.

இவற்றில் பெரும்பாலான கூறுகள் கீழடி அகழாய்வில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. இவை முதிர்ச்சியடைந்த சமூகத்தின் முன்னேறிய தொழில்நுட்ப வளர்ச்சி என்பதை பறைசாற்றுகின்றன. மேலும் கிடைத்துள்ள சான்றுகளின் அடிப்படையில் வைகை நதிக்கரையில் அமைந்துள்ள கீழடியில் நகரநாகரிகம் சிறப்புற்று விளங்கிய ஆதாரத்திற்கு வலுவூட்டுகின்றன.

கீழடி அகழாய்வினை இதுவரை 1 லட்சம் பொதுமக்கள், ஆய்வாளர்கள், ஆர்வலர்கள், பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள் ஆகியோர் பார்வையிட்டுள்ளனர்.

மேலும், பொதுமக்கள் அனைவரும் நேரடியாக தொல்பொருட்களைப் பார்வையிட்டுப் பயனடையும் வகையில் கீழடி அகழாய்வில் கண்டெடுக்கப்பட்ட தொல்பொருட்களின் கண்காட்சியை மதுரை – உலகத் தமிழ்ச் சங்க வளாகத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் துவக்கி வைத்தார்கள்.

மேற்படி தொல்பொருட்களின் கண்காட்சியினை பொதுமக்கள் காலை 11.00 மணி முதல் இரவு 7.00 மணி வரை பார்வையிடலாம். வாரத்தின் அனைத்து நாட்களிலும் அரசு விடுமுறை நாட்களிலும் கண்காட்சியினை பொதுமக்கள் பார்வையிடலாம். இதற்கு கட்டணம் ஏதும் இல்லை.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு.செல்லூர் கே. ராஜு, மாண்புமிகு வருவாய், பேரிடர் மேலாண்மை மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் திரு.ஆர்.பி.உதயகுமார், மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாடுத் துறை அமைச்சர் திரு.க. பாண்டியராஜன், மாண்புமிகு கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியத் துறை அமைச்சர் திரு. ஜி. பாஸ்கரன், தலைமைச் செயலாளர் திரு. க. சண்முகம், இ.ஆ.ப., சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. அசோக் டோங்ரே, இ.ஆ.ப., தொல்லியல் துறை ஆணையர் / முதன்மைச் செயலாளர் திரு. த. உதயச்சந்திரன், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9